

சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அம்பத்தூர் தெற்கு பகுதி நிர்வாகிகள் BLA2, BDA, BYO ஆலோசனைக்கூட்டம் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பி.கே.சேகர் பாபு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினரும்,பகுதி கழகச் செயலாளருமான ஜோசப் சாமுவேல், பி.கே.மூர்த்தி, டி.எஸ்.பி.ராஜகோபால், சன் பி முனியாண்டி, எல்.பி.எஃப். மோகன் மற்றும் BLA2,BDA,BYO ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



திருவள்ளூர் மத்திய மாவட்ட திருமழிசை பேரூர் தி.மு.க. சார்பில் கழக நிர்வாகிகளுடன் ஆலோசனை கூட்டம் பேரூர் செயலாளர் தி.வே.முனுசாமி தலைமையில் ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ் முன்னிலையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார் இந்நிகழ்ச்சியில் சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, தொகுதி பார்வையாளர் பி.டி.சி.செல்வராஜ், மாவட்ட நிர்வாகிகள் எஸ்.ஜெயபாலன், பொதுக்குழு உறுப்பினர் ஜெ.மகாதேவன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எம்.மோகன் மற்றும் திமுக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

# இந்தியாவின் உணவு பதப்படுத்துதல் துறை வளர்ச்சியில் கடும் தேக்கம்!

## விவசாயிகள் மற்றும் MSME நிறுவனங்களை வஞ்சிக்கும் ஒன்றிய அரசிற்கு கே.இ.பிரகாஷ் எம்.பி. கண்டனம்!

புதுடெல்லி, மார்ச் 22-

இந்தியாவின் உணவு பதப்படுத்துதல் துறை வளர்ச்சிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கு குறித்தும், அதை அடைய எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் நாடாளுமன்றத்தில் ஒன்றிய உணவு பதப்படுத்துதல் அமைச்சகத்திடம் கே.இ. பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.



இந்த துறையின் வளர்ச்சி பெருமளவில் தேக்கமடைந்திருப்பதை உறுதிப்படுத்தியுள்ளது. எந்தவிதமான தொலை நோக்குப் பார்வையும், உறுதியான நடவடிக்கைகளும் இல்லாமல், நம் நாட்டின் விவசாயிகள் மற்றும். லட்சக்கணக்கான சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் எதிர்காலத்தை ஒன்றிய அரசு கேள்விக் குறியாக்கியுள்ளது.

1. மிக மந்தமான வளர்ச்சி - ஒன்றிய அரசிற்கு இலக்கு என்று எதுவுமில்லை:

ஒன்றிய அரசு அளித்துள்ள பதிலின்படி, உணவு பதப்படுத்துதல் துறையின் வளர்ச்சி, 2023 24ல் 2.24 லட்சம் கோடி ரூபாயிலிருந்து, அடுத்த 6 ஆண்டுகளில் வெறும் 2.87 லட்சம் கோடி ரூபாயாக மட்டும் உயரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது ஆண்டுக்கு 4% அளவிலான மிக மிகக் குறைந்த வளர்ச்சி விகிதம்.

இந்தியாவின் விவசாய பலத்திற்கு தற்போதைய வளர்ச்சியே போதுமானதல்ல என்று வல்லுநர்கள் கூறும் நிலையில், இந்த 4% வளர்ச்சி இலக்கை வைத்து என்ன செய்வது? மேலும், பணவீக்க விகிதமே ஆண்டுக்கு 5% என்ற நிலையில், இதனால் என்ன பயன்?

2. விவசாயிகள் மற்றும் சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களுக்கு வஞ்சகம்:

“விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவோம்” என்பது, இந்த ஒன்றிய அரசு தேர்தலுக்கு தேர்தல் முன்வைக்கும் முழக்கம். ஆனால், விவசாயிகளின் வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றும் உணவு பதப்படுத்தல் துறையில், அவர்களுக்கான நலனை புறந்தள்ளி வருகிறது ஒன்றிய அரசு.

விவசாயிகள் உணவு பதப்படுத்துதல் துறைக்கு அதிகப் பங்காற்றுவதற்காக இருந்த CBFL (Creation of Backward and Forward Linkages) திட்டங்களை இந்த அரசு 2021LD ஆண்டு நிறுத்திவிட்டது. அது முதல், இடைத்தரகர்களின் ஆதிக்கத்தில் விவசாயிகள் சிக்கித் தவிக்கிறார்கள். ஒன்றிய அரசு பெரிதாகப் பேசும் Agri Infra Fundம், அவர்களை மேலும் கடனாளிகள் மட்டுமே ஆக்கிக் கொண்டிருக்கிறது.

இந்த துறையில் பெருமளவு பங்களிக்கும் சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களை எடுத்துக் கொண்டால், அங்கும் PLI (Production Linked Incentive) திட்டத்தை முக்கியத்துவப்படுத்தி, அவர்களுக்குப் பதில் பெரும் கார்ப்பரேட் நிறுவனங்கள் பலனடைய வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது. PMFME (Pradhan Mantri Formalisation of Micro Food Processing Enterprises) திட்டம் அவர்களுக்கு உதவுவதற்குப் பதிலாக, வங்கிகளால் அலைக்கழிக்கப்படுவதையே உறுதிப்படுத்துகிறது.

3. தொடர்ச்சியாக புறக்கணிக்கப்படும் தமிழ்நாடு மற்றும் ஈரோடு:

இந்திய அளவில் அளவில் அதிக விவசாய உற்பத்தித் திறன் கொண்ட மாநிலங்களில் ஒன்றாகவும், ஒன்றியத்திற்கு அதிக வரி வருவாய் அளிக்கும் மாநிலமாகவும் திகழ்கிறது தமிழ்நாடு. ஆனாலும், தமிழ்நாட்டை தொடர்ந்து புறக்கணிக்கும் போக்கை மாற்றிக் கொள்ளவில்லை ஒன்றிய அரசு.

மெகா உணவு பூங்காக்கள் திட்டம் நடைமுறையில் இருந்த ஆண்டுகளில், தமிழ்நாட்டிற்கு 1ம், மற்ற பல மாநிலங்களுக்கு 3,4 என்ற அளவிலும் ஒதுக்கப்பட்டன. அந்த ஒன்றின் பணியும் இதுவரை முடிந்த பாடில்லை.

தற்போது, PLI திட்டத்தில் குறைவான தமிழ்நாடு நிறுவனங்களுக்கு மட்டுமே அனுமதி உள்ளிட்ட நடவடிக்கைகளால், புறக்கணிப்புச் செயலை உச்சக்கட்டத்தில் நிகழ்த்திக் கொண்டிருக்கிறது.

எனது தொகுதியான ஈரோட்டைப் பற்றி பேசினால், நியாயப்படி இங்கு அமையவேண்டிய மஞ்சள் வாரிய அலுவலகத்தை தெலுங்கானாவுக்கு மாற்றியது. இதனால், ஈரோட்டு மஞ்சளின் சர்வதேச சந்தைப்படுத்தல் கடும் பாதிப்பை சந்தித்துள்ளது. மேற்கொண்டு, மண்டல அலுவலகம் அமைத்தல், மதிப்புக் கூட்டலுக்கான ஆய்வகம் அமைத்தல் போன்றவற்றிலும் ஈரோட்டிற்கு துரோகம் மட்டுமே இழைத்துக் கொண்டிருக்கிறது.

இந்தியாவின் முதுகெலும்பு விவசாயிகள் என்றால், அந்த விவசாயிகளின் முதுகெலும்பு உணவு பதப்படுத்துதல் துறையில் தான் உள்ளது. மேலும், இந்த துறையைச் சுற்றி லட்சக்கணக்கான சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களின் வாழ்வாதாரமும், பல லட்சக்கணக்கான மக்களின் வேலைவாய்ப்பும் உள்ளன.

இப்படிப்பட்ட மிகமுக்கியத் துறையின் வளர்ச்சியை, தமிழ்நாடு உள்ளிட்ட அதிக உற்பத்தி மாநிலங்களுக்கு உரிய முக்கியத்துவம் அளித்து ஒன்றிய அரசு முன்னேற்ற வேண்டும்!

இவ்வாறு கே.இ. பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.



ரம்ஜான் திருநாளை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்ட வர்த்தக அணி சார்பில் கடம்பத்தூர் ஒன்றியம் மணவாளநகர் அண்ணா நகர் பகுதியில் உள்ள மஸ்ஜித் உமர்பின் கத்தர்ப் பள்ளிவாசலில் மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் பி.ஆர்.பிரபாகரன் தலைமையில் தொழுகை நடத்த வருகை புரிந்த இஸ்லாமிய பெருமக்களுக்கு மத நல்லிணக்கத்தை கடைபிடிக்கும் வகையில் அவர்களுக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்து பங்கேற்றார்கள் இதில் நிர்வாகிகள் தாடி நந்தகோபால், புட்லூர் ராஜேந்திரகுமார், சி.ஆர்.குமரன், கொப்பூர் திலீப்குமார், ராம்கி, மண்புகழ் மனோகரன், பெரியசாமி, பாலசுப்பிரமணியம், ஜானகிராமன், ராம்தாஸ், ஜெய்பிரகாஷ், பாபு, பழனி, சதீஷ், ராஜேஷ், வாட்டர் கார்த்திக், மோகன்,அன்பழகன் அண்ணாமலை சீனிவாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### சர்வதேச அளவில் திரைப்படங்களை காட்சிப்படுத்த -

# திரைப்படத் தயாரிப்புகளை ஊக்குவிக்க எடுத்த நடவடிக்கை என்ன?

## மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 22-

இந்தியாவில் திரைப்பட விழாக்கள் இந்திய திரைப்படங்களை சர்வதேச அளவில் காட்சிப்படுத்துவதற்கவும் சர்வதேச திரைப்பட தயாரிப்புகளை ஊக்குவிக்கவும் ஒன்றிய அரசு எடுத்த சீரிய நடவடிக்கைகள் குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

நம் நாட்டில் ‘திரைப்பட விழாக்கள் மூலம் ஏற்றுமதி ஊக்குவிப்பு’ என்ற திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு ஏதும் செய்திருக்கிறதா? அப்படியானால், அதன் விவரங்கள் தருக? நமது இந்திய நாட்டில் வெளிநாட்டுத் திரைப்படத் தயாரிப்புக்கான ஊக்கத்தொகையை 40 சதவீதமாக, அதிகபட்ச ஊக்கத் தொகை ரூ.30 கோடியாக உயர்த்தியுள்ளதா? அப்படியானால், அதன் விவரம்; மற்றும்

டெல்லியில் இந்திய சர்வதேச திரைப்பட விழா (IFFI) மற்றும் சர்வதேச திரைப்பட விழாவை நடத்துவதற்கு. ஒன்றிய அரசாங்கம் நிதி வழங்கியுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? என மக்களவையில் டி.எம். கதிர்ஆன்ந்த் கேள்வி எழுப்பினார்.

இரயில்வே, தகவல் மற்றும் ஒளிபரப்பு மற்றும் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் கீழ் வருமாறு:

லோக் சபா நட்சத்திரமிட்ட கேள்வி எண்.366 பதிலில் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கை,

“திரைப்பட விழாக்கள் மூலம் ஏற்றுமதி ஊக்குவிப்பு” என்ற நேரடித் திட்டம் எதுவும் ஒன்றிய அரசின் நடைமுறையில் இல்லை. இருப்பினும், ஒன்றிய அரசாங்கம் இந்திய சினிமாவை ஊக்குவிக்கிறது மற்றும் திரைப்பட உள்ளடக்கத்தின் (DCDFC) திட்டத்தின் மேம்பாடு, தொடர்பு மற்றும் பரப்புதல் மூலம் சர்வதேச ஒத்துழைப்புகளை எளிதாக்குகிறது.

மேலும், DCDFC திட்டத்தின் கீழ் முக்கிய சர்வதேச திரைப்பட விழாக்களில் பங்கேற்பதற்கும், இந்தியாவில் திரைப்பட விழா க்களை நடத்துவதற்கும், தேசிய திரைப்பட பாரம்பரிய இயக்கம் (NFHM) மற்றும் திரைப்படம் தொடர்பான விளம்பர நடவடிக்கை கள் மற்றும் சர்வதேச அளவில் இந்திய சினிமாவைக் காட்சிப்படுத்துவதற்கு இந்தியத் தூதரகங்கள் மூலம் இந்திய சினிமாவை மேம்படுத்துவதற்கும் நிதியுதவி வழங்கப்படுகிறது.



நவம்பர் 20, 2023 அன்று கோவாவில் நடைபெற்ற 54வது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் (IFFI) அரசாங்கம் இந்தத் திட்டத்தில் ஒரு பெரிய திருத்தத்தை அறிவித்தது மற்றும் இந்தியாவில் சர்வதேச தயாரிப்பாளர்களின் திரைப்படத் தயாரிப்பை ஊக்குவிப்பதற்காக ஊக்கத்தொகையை 40 சதவீதமாக உயர்த்தியது. திருத்த ப்பட்ட ஊக்கத்தொகைகளில் பின்வரு வன அடங்கும்:

1. 30% அடிப்படைத் திருப்பிச் செலுத்துதல், 2. குறைந்தபட்சம் 15% இந்திய மனிதவளத்தைப் பயன்படுத்துவதற்கு 5% போனஸ் மற்றும் 3. குறிப்பிடத்தக்க இந்திய உள்ளடக்கத்திற்கு (SIC) 5% போனஸ்.

மேலும், ஒரு திட்டத்திற்கான அதிகபட்ச ஊக்கத்தொகை ஒரு திட்டத்திற்கு, 2.5 கோடியிலிருந்து 30 கோடியாக உயர்த்தப்பட்டது.

சர்வதேச அளவில் இந்தியத் திரைப்படத் தொழிலை ஊக்குவிக்கவும் ஒருங்கிணைக்கவும், கோவா மாநில அரசாங்கத்துடன் இணைந்து ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 20 முதல் 28 வரை இந்தியத் திரைப்பட விழாவை (IFFI) ஒன்றிய அரசு நடத்துகிறது. IFFI இன் 56வது பதிப்பு, 2025க்கு, ஒன்றிய அரசு ரூ. 39.43 கோடி திரைப்பட உள்ளடக்கத் திட்டத் தின் (DCDFC) மேம்பாடு, தொடர்பு மற்றும் பரப்புதல் ஆகியவற்றின் கீழ். வழங்கியது.

மேலும், டெல்லியில் நடந்த சர்வதேச திரைப்பட விழாவிற்கு நிதி வழங்கப்படவில்லை.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் புழல் ஒன்றியம் வடகரை ஊராட்சியில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ., மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார் முன்னிலையில் புழல் ஒன்றிய பொறுப்பாளர் சி.அற்புதராஜ் தலைமையில், புழல் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் யு.பிரேம்குமார் உதயசூரியன் ஏற்பாட்டில் நேற்று ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு நியூ ஸ்டார் சிட்டியில் அமைந்துள்ள மசூதியில் இனிப்புகள் வழங்கி இஸ்லாமிய சகோதரர்களுக்கு ரம்ஜான் வாழ்த்து தெரிவித்தனர். இதில் எஸ் யுவராஜ், டேவிட், ஐயப்பன், குறளரசன், மணிமாறன், அஸ்வின், கந்தசாமி, உதயகுமார், வெங்கடேசன் திராவிட டில்லி, சேகர்,புலேந்தர், பாபா பழனி, நாகராஜ் கேசவன், விக்கி, செந்தில், ஜான் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சொ. காவேரிமணியம்

**மார்ச் 22 (2006)**



**மதுரை மாவட்டக் கழகச் செயலாளராகவும், மாநகரச் செயலாளராகவும் சிறப்பாகப் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகத் தீர்மானக்குழுத் தலைவராகவும், உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினராகவும், மதுரை வடக்கு மாவட்ட தொழிற்சங்கத் தலைவராகவும் திறம்படப் பணியாற்றியவர்.**

**1971ல் திருப்பரங்குன்றம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றி நற்பெயர் பெற்றவர்.**

**“எந்த நிலையிலும் கொள்கை உறுதியில் ஒரு சிறிதும் குலையாமல்; அழுத்தம் திருத்தமாக அரசியல் செயல்பாடுகளை அஞ்சா நெஞ்சுடன் ஆற்றிவந்த அரிமா அவர். எளிமையான வாழ்க்கை. எஃகு உள்ளம் – என்றைக்கும் எங்களோடு ஒருவராக இருந்து இயக்கம் வளர்த்த இனிய உடன்பிறப்பு” எனத் தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.**


**தலைவர் கலைஞர் அவர்கள் 1996ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் இவருக்கு ‘அண்ணா விருது’ வழங்கிச் சிறப்பித்தார்கள்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காட்டாங்கொளத்தூர் எம்.வி.இராமு

**மார்ச் 22 (2017)**



**காஞ்சிபுரம் மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் தணிக்கைக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**காட்டாங்கொளத்தூர் ஒன்றியக்குழுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டதோடு, நெருக்கடிகால மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**